OS 58/2020

பி.வா.சா.3 தட்சிணாமூர்த்தி த/பெ முருகேசன்

நாள் 03.02.2026

**குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. நானும் 4ம் பிரதிவாதியும் சேர்ந்து இந்த வழக்கை எதிர் நடத்துகிறோம் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் விசாரிக்க இருக்கிறேன். 4ம் பிரதிவாதியிடம் இருந்து தான் நான் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் போளூர் தாலுக்கா காலசமுத்திரம் கிராமம் ஆகும். நான் பிறந்து வளர்ந்தது அங்கு தான். வழக்கு சொத்து ஆரணி தாலுக்கா ஆகாரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பூபதியின் மனைவி தான் சாந்தி என்றால் சரிதான். பூபதிக்கும் சாந்திக்கும் சுமதி, ஏகவள்ளி மகள்கள் வாதி நீலகண்டன் மகன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சாந்தியின் தம்பி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுமதி எனது மனைவி ஆவார். எனக்கும் சுமதிக்கும் காலசமுத்திரத்தில் திருமணம் ஆனது என்றால் சரிதான். எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 1997ல் நடந்தது.

2. திருமணத்திற்கு முன்பு சுமதி எனக்கு உறவு முறை இல்லை. நானும் எனது மனைவியும் மாமனார் மாமியார் ஒன்றாக தான் இருக்கிறோம் என்றால் 2010ம் ஆண்டில் இருந்து தான் ஒன்றாக இருக்கிறோம். எனக்கு திருமணம் ஆனதிலிருந்து 2010 வரை காலசமுத்திரத்தில் தான் இருந்தேன். எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பு வாதி நீலகண்டன் மற்றும் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் நடந்த விவரம் தெரியாது. 1ம் பிரதிவாதி பூபதிக்கு பூர்வீக சொத்துகள் இருந்தது என்றால் சரிதான். பூர்வீக சொத்துகளை அவர் விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். பூர்வீக சொத்துகள் 2006ல் விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான். பூர்வீக சொத்தை விற்பனை செய்வதற்கு முன்பே 2003ம் ஆண்டு வழக்கு சொத்தை பூபதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். பூபதி ஆடுகள் வளர்த்து வந்தார் என்றால் இல்லை. வாதி நீலகண்டன் காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். வாதி காதல் திருமணம் செய்ததால் அவரை யாருக்கும் பிடிக்கவில்லை என்றால் அது தவறு வாதி திருமணம் செய்த பிறகு யாரையும் பார்க்க வரவில்லை.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நீலகண்டன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அதற்கு 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை தனிப்பட்ட வருவாய் மூலம் பூபதி கிரையம் வாங்கியதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பூபதி தனிப்பட்ட வருவாய் ஏதும் இல்லை என்றால் அவர் மாட்டுவண்டி வைத்து மூட்டை தூக்கி சம்பாதித்து வாங்கினார். கூட்டுக்குடும்பமாக இருந்த போது கூட்டுக்குடும்ப வருவாய் மூலமும் ஆடு வளர்த்த வருவாய் மூலமும் பூபதி கிரையம் வாங்கினார் என்றால் இல்லை. நீலகண்டனுக்கு உடல் நிலை சரியில்லாத போது நான் தான் சென்னையில் மருத்துவம் பார்த்ததாக முதன்மை வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதுபோன்று மருத்துவம் பார்த்து இருந்தால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் அந்த ஆவணங்கள் வாதியிடம் உள்ளது.

4. தாவா சொத்து கூட்டுக்குடும்பமாக இருந்த போது வாங்கிய சொத்து என்பதால் வாதிக்கும் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்ப சொத்தை 1ம் பிரதிவாதி இளங்கோ என்பவருக்கு விற்பனை செய்ய உரிமை இல்லை என்றால் தனிப்பட் சொத்தை விற்பனை செய்ய உரிமை உள்ளது. 1ம் பிரதிவாதியிடம் இருந்து 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கியது செல்லாது என்றாலும் 4ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் வாங்கியது செல்லாது என்றாலும் சரியல்ல. எனது பெயரில் பட்டா இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். கூட்டுக்குடும்ப சொத்தில் வாதிக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல.